**தேயிலை மற்றும் இறப்பர் சிறுநிலவுடமையாளர்களினை பலப்படுத்தல் செயற்திட்டம் - 2022**

---

தேயிலை மற்றும் இறப்பர் சிறுநிலவுடமையாளர்களினை பலப்படுத்தல் செயற்திட்டத்தின் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியத்திற்குமிடையில் கைச்சாத்திடப்பட்ட 2016 ஏப்ரல் 26 ஆம் திகதிய 2000001447 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் IX ஆம் உறுப்புரையின் 9.03(அ) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி**

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராகவும் அமுலாக்கல் முகவராகவும் உள்ளது. செயற்திட்டப் பகுதியிலுள்ள தேயிலை மற்றும் இறப்பர் சிறுநிலவுடமையாளர்களின் அதிக உற்பத்தி, இலாபத்தன்மை மற்றும் மீட்சியடையும் பொருளாதார நடவடிக்கைகள் என்பவற்றை அபிவிருத்தி செய்தல் செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 8,502 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 65.4 மில்லியனாக உள்ளதுடன் அதில் ரூபா 3,349 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 25.77 மில்லியன் விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியத்தால் நிதியளிக்கப்படுவதற்கு இணக்கம் காணப்பட்டது. ரூபா 5,153 மில்லியன் மிகுதி தொகை இலங்கை அரசாங்கத்திலுள்ள வங்கிகள், பயனாளிகள் மற்றும் தனியார் துறை என்பவற்றால் நிதியளிப்புச் செய்யப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2016 ஆகஸ்ட் 15 இல் தொடங்கியிருந்ததுடன் 2021 ஏப்ரல் 23 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது. எனினும் செயற்திட்ட நடவடிக்கைகளின் பூர்த்தி செய்தல் திகதி 2023 செப்தெம்பர் 30 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

**1.3 அபிப்பிராயம்**

செயற்திட்டத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

**1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. பௌதீக செயலாற்றல்

### 2.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக செயன்முன்னேற்றம்

| கூறு | செயற்பாடு | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு எதிர்பார்க்கப்பட்ட பௌதீக செயலாற்றல் அலகுகள் | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அடைந்து கொள்ளப்பட்ட செயலாற்றல் அலகுகள் | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | தாமதத்திற்கான காரணம் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|---|
| தேயிலை சிறுநிலவுடமையாளர் அபிவிருத்தி | தேயிலை சிறுநிலவுடமையாளர்களுக்கான சந்தை சார்ந்த உற்பத்தி ஆதரவு | **4,500** ha | 2,465 ha | 2016 முதல் 2022 யூன் 30 வரை தெரிவுசெய்யப்பட்ட ஆறு மாவட்டங்களில் 5,500 ஹெக்டெயர் தேயிலை நிலங்களை புனரமைத்து மீண்டும் நடவு செய்வதற்கு செயற்திட்டம் திட்டமிட்டிருந்தது. எனினும், திட்டமிட்டவாறு 2016 இல் செயற்பாடுகளை தொடங்குவதற்கு செயற்திட்டம் தவறியதால் தேயிலை நிலங்களை புனரமைத்து மீண்டும் நடவு செய்வதற்கான இலக்கு 4,500 ஹெக்டெயராக மாற்றப்பட்டது. எனினும் 2,035 ஹெக்டெயரில் தேயிலை பயிரிடப்பட்டிருக்கவில்லை. | 2023.09.30 இல் செயற்திட்டத்தை முடிப்பதற்கு முன்னர் மீள்பயிரிட வேண்டிய மிகுதி 2,035 ஹெக்டெயர் தேயிலையை அடைந்துகொள்வதற்கு மாவட்ட மட்டத்தில் மூலோபாயங்கள் அமுல்ப்படுத்தப்பட்டன. | தேயிலை மீள் நடவுக்கான மானியக் கொடுப்பனவுகளில் பின்னடைவு காணப்பட்டது. | செயற்திட்டத்தின் செயற்பாடுகள் காலதாமதமின்றி செயற்திட்ட காலப்பகுதியினுள் பட்டியலிட்டவாறு மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் சிக்கனமான முறையில் நிதியேற்பாடு பயன்படுத்தப்பட வேண்டும். |

### 2.2 குறைவாக பயன்படுத்தப்பட்ட வளங்கள்

| இல. | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | அம்பாறை மாவட்டத்தில் 213 சிறிய இறப்பர் தோட்ட உரிமையாளர்களின் 122 ஹெக்டெயர் இறப்பர் காணிகளும் மொனராகலை மாவட்டத்தில் 359 சிறிய இறப்பர் தோட்ட உரிமையாளர்களின் 227 ஹெக்டெயர் இறப்பர் காணிகளும் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தோல்வியடைந்திருந்தன. எனினும் ரூபா 4 மில்லியன் ரூபா 7 மில்லியன் பயிர்ச்செய்கை உதவி முறையே அம்பாறை மற்றும் மொனராகலை மாவட்டங்களில் தோல்வியடைந்த சிறிய இறப்பர் தோட்ட உரிமையாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. | முந்தேனியாறு நீர்த்தேக்கத்திற்காக அரசால் கையகப்படுத்தப்பட்ட காணிகள் மற்றும் காட்டு விலங்குகளின் அச்சுறுத்தல், காட்டுத் தீ மற்றும் கடுமையான வறட்சி போன்ற காரணங்களால் தாவரங்கள் சேதப்படுத்தப்பட்டமை வெற்றியளிக்காததற்குக் காரணமாகும். | திட்டத்தின் செயற்பாடுகள் காலதாமதமின்றி செயற்திட்ட காலப்பகுதியினுள் பட்டியலிட்டவாறு மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் சிக்கனமான முறையில் நிதியேற்பாடு பயன்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மானியத் திட்டத்தின் கீழ் 2017 முதல் 2022 வரையான காலப்பகுதியில் ஆறு மாவட்டங்களில் மொத்தம் 578 ஹெக்டெயர் நிலப்பரப்பில் தேயிலையை மீள்நடவு செய்வதற்கான அனுமதிப் பத்திரங்களைப் பெற்ற 2523 பயனாளிகள் காணியை அளப்பதில் தாமதம் மற்றும் புல் நடவு செய்வதில் தாமதம் போன்ற பல்வேறு காரணங்களால் ரூபா 87 மில்லியன் முற்பணக் கொடுப்பனவுகளை பெற்ற பின்னர் எந்தப் பணியையும் ஆரம்பித்திருக்கவில்லை. | தேயிலை மீள்நடவு செயற்திட்டத்தை ஊக்குவிப்பதற்காக, பழைய தேயிலையை வேரோடு பிடுங்குவதற்கு பகுதியளவு நிதியுதவி முன்கூட்டியே வழங்கப்பட்டு நிலத்தைத் தயாரிப்பதற்காக மிகுதி ஹெக்டெயர் ஒன்றிற்கு ரூபா 150,000 படி மூலதன மானியமாக வழங்கப்பட்டது. TSHDA இன் தேயிலை பரிசோதகர்களின் பரிந்துரையுடன் தேயிலையை மீள்நடவு செய்வதற்காக உண்மையான பகுதியைக் கருத்தில் கொண்டு கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டது.<br><br>புதிய உத்திகளின் கீழ் தயாரிப்பிற்கு மீட்டெடுத்து மாற்றுவதற்கு உத்திகள் அமுல்ப்படுத்தப்பட்டன. அவர்கள் 2023 செப்தெம்பரிற்குள் தேயிலை மீள்நடவுகளை பூர்த்தி செய்ய வேண்டும். | தீர்மானிக்கப்பட்ட நடவடிக்கைகள் PMU மூலமான கண்காணிப்புடன் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | இச் செயற்திட்டம் அதன் உட்கட்டமைப்பு அபிவிருத்திக்காக ரூபா 45 மில்லியனை ஒதுக்கியிருந்ததுடன் இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்திற்குச் சொந்தமான அம்பாறை மாவட்டத்தில் பதியத்தலாவையில் அமைந்துள்ள நாற்றுப்பண்ணையில் இருந்து ஆண்டொன்றிற்கு 250,000 இறப்பர் செடிகளை விநியோகிக்கும் திறனை கொண்டிருந்ததுடன் மீளாய்வாண்டில் செயற்திட்டத்தின் மூலம் நாற்றுப்பண்ணை அபிவிருத்திக்காக ரூபா 7 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. எனினும் செயற்திட்டமானது அதன் நாற்றுப்பண்ணையில் இருந்து 40,365 இறப்பர் செடிகளை மாத்திரமே பெற முடிந்ததுடன் மிகுதி தொகை ஏனைய நாற்றுப்பண்ணைகளிலிருந்து கொள்வனவு செய்யப்பட்டதுடன் ரூபா 22 மில்லியன் மேலதிக தொகை போக்குவரத்துக்காக செலவிடப்பட்டிருந்தது. | 2023.05.31 இல் உள்ளவாறு 2022 ஆம் ஆண்டில் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக செயற்திட்டமானது ரூபா 53.69 மில்லியனை நிதியளித்திருந்ததால் பதியத்தலாவ நாற்றுப்பண்ணையால் வழங்கப்பட்ட மொத்த இறப்பர் செடிகளின் எண்ணிக்கை 40,365 ஆகும். தேவையான 325,039 மீதியில் 312,417 செடிகள் மாத்திரமே RDD இன் ஏனைய நாற்றுப்பண்ணைகளால் வழங்கப்பட்டன.<br>2022 ஆம் ஆண்டில் இச் செயற்திட்டத்தின் மூலம் அம்பாறை மற்றும் மொனராகலை மாவட்டங்களில் உள்ள பயனாளிகளின் காணிகளுக்கு கொள்வனவு செய்யப்பட்ட மொட்டு இறப்பர் செடிகளை வழங்குவதற்கு ரூபா 22,097,293 வெளிப்படையான போக்குவரத்துச் செலவு ஏற்பட்டது. | தேவையற்ற செலவினங்களைக் குறைப்பதற்கு உரிய காலத்தில் அனைத்து தொடர்புடைய நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஈ) | தேயிலை உற்பத்தியாளர்களின் விரிவாக்க சேவைகளுக்காக ரூபா 2 மில்லியன் மற்றும் ஒதுக்கீட்டில் 94 சதவீதம் செலவிடப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டில் உள்ளவாறு 38 சதவீதமான பௌதீக முன்னேற்றம் | எரிபொருள் விலைகளின் தொடர்ச்சியான விலையேற்றம் மற்றும் போக்குவரத்து, தங்குமிடம், உணவு, சிற்றுண்டி போன்ற ஏனைய செலவினங்களின் அதிக விலைகள் காரணமாக, செயற்திட்டக் | திட்டத்தின் செயற்பாடுகள் சிக்கனமான முறையுடன் செயற்திட்ட காலத்திற்குள் |

| | | | |
|---|---|---|---|
| | மாத்திரமே அடைந்துகொள்ளப்பட்டுள்ளது. | கட்டுப்பாட்டிற்கு அப்பால், 2022 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட ஒதுக்கீட்டிற்குள் குறைந்த எண்ணிக்கையிலான நிகழ்ச்சிகளை நடாத்த வேண்டியிருந்தது. | பட்டியலிட்டவாறு மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (உ) | 50 சிறிய அளவிலான இறப்பர் பதப்படுத்தும் அலகுகளை நிறுவுவதற்கு ரூபா 67 மில்லியன் மற்றும் ஒதுக்கப்பட்ட நிதியில் 93 சதவீதம் பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும் 2023 யூன் 14 இல் 33 அலகுகள் மாத்திரமே பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. | செயற்திட்ட PDR இன் பிரகாரம் 48 பெரிய அளவிலான பதப்படுத்தும் அலகுகள் மாத்திரமே முன்மொழியப்பட்டது. RRI மற்றும் செயற்திட்டத்துடன் இணைந்து நடாத்தப்படும் கள அளவிலான மதிப்பீட்டின் அடிப்படையில் 48 இறப்பர் பதப்படுத்தும் நிலையங்கள் இலக்காக நிர்ணயிக்கப்பட்ட போதிலும், மாதம் ஒன்றுக்கு 50 கிலோகிராம் முதல் 100 கிலோகிராம் வரை பதப்படுத்தும் திறனில் 50 அலகுகளை நிறுவுவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது. | சிக்கனமான முறையில் இலக்கு அடைந்து கொள்ளப்பட வேண்டும். |

## 2.3 பயன்படுத்தப்படாத வளங்கள்

| இல. | கணக்காய்வு விடயங்கள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | இச் செயற்திட்டத்தின் மூலம் தயாரிக்கப்பட்ட வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 2022 ஆம் ஆண்டில் கிராமிய நிதியுதவியின் கீழ் தேசிய அளவிலான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டத்திற்கு ரூபா 500,000 ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கடன் திட்டத்தின் ii ஆம் கட்டத்தின் அங்கீகாரத்திற்காக சிக்கலான நடைமுறையைப் பின்பற்றியதால் ii ஆம் கட்டத்தின் ஆரம்பிப்பு 2023.05.01 இல் தொடங்கப்பட்டது, 2022 ஆம் ஆண்டில் தேசிய அளவிலான விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களுக்கான ஒதுக்கீடுகள், திட்டமிட்டவாறு பயன்படுத்தப்பட முடியாதிருந்தன. | நிதியேற்பாடுகள் உரிய காலத்திலும் சிக்கனமான முறையிலும் பயன்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | எரிபொருள் பிரச்சனை தொடர்பான நடைமுறைச் சிக்கல்கள் காரணமாக நிறுத்தப்பட்ட இறப்பர் செய்கை தொடர்பான மாதிரி இயற்கைக் கிராமங்களை அமைப்பதற்காக ரூபா 8 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் ரூபா 2 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. | நாடு முழுவதும் நிலவும் எரிபொருள் நெருக்கடி மற்றும் எரிபொருள் விலைகளின் தாங்க முடியாத விலை ஏற்றம் மற்றும் பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான கட்டுப்படுத்த முடியாத உயர் பணவீக்கம் மற்றும் இறக்குமதி கட்டுப்பாடுகள் காரணமாக சாதனத் தேவைகளின் பற்றாக்குறை காரணமாக மீளாய்வாண்டில் நடவடிக்கையை மேலும் அமுல்ப்படுத்துவது இடைநிறுத்தப்பட்டது. | ஒரு சிறந்த பெறுபேற்றிற்காக ஒதுக்கீடுகள் மற்றும் செலவினங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |